நல்லூர் கிளை நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper மக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 32 (14 - 06 - 1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 17

## வேலைபெறச் சென்றவர் பொலிசாரால் கைது

பதவி இழந்த ஊழியர் ஒருவர் வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையில் தெரிவிக்கப்பட்ட அறிவிப்புக்கு இணங்க தனது வேலையைப் பெறுவதற்காக கொழும்பு சென்றபோது அமைச்சிலவைத்தே பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இதுபற்றி மேலும் தெரியவருவதாவது மாவட்ட தொலைத் தொடர்பு திணைக்களத்தில் பரிசோதகராக கடமையாற்றும் செந்திவேல் என்பவர் ஒன்றரை வருடம் கடமைக்குச் செல்லாததால் பதவியிலிருந்து விலகியதாக கருதப்பட்டு வேலையை இழக்க நேர்ந்தது அண்மையில் வவுனியாவில் நடாத்தப்பட்ட நடமாடும் (4 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளை பணியவைக்க

# ராணுவ - அரசியல் அழுத்தங்கள்

## சிங்கள அரசின் புதிய தந்திரோபாயம்

(கொழும்பு)

இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அழுத்தங்களை பிரயோகித்து விடுதலைப் புலிகளை பணியவைக்கும் நோக்குடன் புதிய தந்திரோபாயத்தை சிறிலங்கா அரசு கடைப் பிடித்துவருகிறது.

வடக்கில் பல முனையில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அதேவேளை அரசியல் ரீதியாக தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு புலிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க அரசு முயன்றுவருகிறது இவ் விடயத்தில் பாராளுமன்ற தெரிவுக்குழுவை பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

வடக்கில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு விடுதலைப்புலிகளின் ஆட்பலத்தையும், ஆயுதபலத்தையும் குறைத்து புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்தும் போர்முறைத் திட்டத்தை நடைமுறைப் படுத்திய வண்ணம் மறுபுறத்தில், பாராளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக புலிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதே சிங்கள அர (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தீர்வுத் திட்டத்தை தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கலாமாம்

## 50 கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் யாழ். நகரின் கோட்டை, தொலைத்தொடர்பு நிலையம் கொட்டடி ஆகிய கரையோரப் பகுதிகளை நோக்கி மாலை 3-00 மணி தொடக்கம் நள்ளிரவு வரை தொடர்ச்சியான 50 கலிபர்த் தாக்குதல்களை நிகழ்த்திய வண்ணம் இருந்தனர். (பா),(21)

## வவுனி. ராணுவ நடவடிக்கை திடீரென நிறுத்தம்

## வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் கடற்படைக்கப்பல்

(வடமராட்சி கிழக்கு)

வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையின் தாய்க்கப்பல் ஒன்று காணப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் இக்கப்பல் தாளையடி கடற் பகுதியில் காணப்பட்டது.

வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் திரும்பவும். இக்கப்பலின் நடமாட்டம் அக்கடற்பகுதியில் தற்போது காணப்படுகின்றது (36)

## பிரேமா தமிழ்க் குழுக்கள் சந்திப்பு

## வீரச்சாவு



கப்டன் வழுதி



வவுனியாவில் ஆரம்பிக்கப் படவிருந்த யுத்த நடவடிக்கை சிறிலங்கா இராணுவத்தின ரால் திடீர் என்று நிறுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகி றது.

கடந்த பத்தாம் திகதி காலை வவுனியா பேயாடி கூழங்குளம் இராணுவ சோதனை முகாமைத் தளமாகக் கொண்டு முன்னேறி வந்த இராணுவத்தி னர் திடீர் என்று பின்வாங்கிச் சென்றனர்.

வவுனியாவில் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்த இராணு வத்தில் பலர் திடீர் என்று மணலாறு மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர் என் றும் அறியப்பட்டது.

இதேவேளை மாமடு இரா ணுவ முகாமில் ஏற்கனவே பெருமளவிலான இராணுவத் தினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (தி)

## ரயில் பாதுகாப்பு ஊழியர் பொலிஸார் கைகலப்பு

(வவுனியா)

பொலிசாருக்கும் புகையிரத பாதுகாவல் ஊழியர்களுக்கு மிடையே கைகலப்பு நிகழ்ந்த காரணத்தினால் வவுனியா வரை ரயில் தாமதமாக வந்து சேர்ந்தது.

பொசன் கொண்டாட்டத் திற்காக கொழும்பிலிருந்து அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பொலிஸாரே இந்தக் கைகலப்பில் ஈடுபட்ட னர்.

இச்சம்பவம்பற்றி தெரிய வருவதாவது, பொசன் நிகழ் விற்காக விஷேடமாக அனுப் பிவைக்கப்பட்ட சுமார் நூற்றி ஐம்பது பொலிசாரும் பிர யாணிகள் முன் அனுமதி பெற்றிருந்த ஆசனத்தில் அமர்ந்தனராம். இதை அடுத்தே கைகலப்பு நிகழ்ந்தது.

பலரோவிலும் முறுகல் நிலை இருந்ததாகவும் கூறப்பட்டது.

உயர் பொலிஸ் அதிகாரிகள் தான் கைகலப்பைத் தடுத்த னர் இதன் காரணமாக சில மணிநேரம் பிந்தியே வவுனியா விற்கு ரயில் வந்து சேர்ந்தது. (தி)

## பூசா தடுப்பு முகாமினுள் ஒரு தொகை ஆயுதங்கள்

பூசா தடுப்பு முகாமில் இரு ந்து ஒருதொகை ஆயுதங்களை காலி பயங்கரவாத ஒழிப்பு பொலிஸார் கடந்த புதன் கிழமை கைப்பற்றியுள்ளனர்.

இரண்டு வாள், மண்ணி னால் நிறைக்கப்பட்ட 18 போத்தல்கள், 5 எஸ்லோன் பெட்டிகள், 9இரும்பு கம்பிகள், நுனிப் பக்கம் தீட்டி கூராக்கப் பட்ட 24 இரும்புக் கம்பிகள், கம்பியினால் சுற்றப்பட்ட 18 பொல்லுகள் அசிட்டினால் நிறைக்கப்பட்ட ஒருதொகை பல்புகள் என்பனவே கைப்பற் றப்பட்ட பொருட்களாகும்.

இப்பொருட்கள் எவ்வாறு தடுப்பு முகாமினுள் கொண்டு செல்லப்பட்டன என்பது குறி த்து காலி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 3,000 பொதுமக்கள் வலிவடக்கில் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தாக்குதல் நடை பெறலாம் என்ற அச்சம் கார ணமாகவும் வதந்திகள் காரண மாகவும் போயிட்டி, வடக்கு இளவாலை, சித்திரமேழி, கருகம்பானை, சிறுவிளான், முள்ளானை, இளவாலை பகுதி களிலிருந்து பெருமளவு பொது மக்கள் இடம் பெயர்ந்துள்ள னர்.

இடம்பெயர்ந்த பொது மக் கள் ஆலயங்களிலும் பாட சாலைகளிலும் தஞ்சம் புகுந் துள்ளனர். சுமார் 3,000க்கும் அதிகமான பொதுமக்கள் அடிப்படை வசதிகளின்றிப் பெரும் துன்பத்திற்குள்ளாகி யுள்ளனர்.

வான்தாக்குதல்கள், எறி கணை வீச்சுகள், துப்பாக்கிப் பிரயோகங்களினாலும், சமூக விரோதிகள் பரப்பி வரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### வீரவேங்கை செல்லையா

13-06-1992 அன்று விடுத லைப் புலிகள் போராளி வீர வேங்கை செல்லையா (தேவ ராசா) விஜயரஞ்சன் கிருஷ் ணன் கோவில் வடக்கு வீதி, பொன்னாலை சுழிபுரம்) என் பவர் சுகயீனம் காரணமாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கலாம் அழைத்தால் யாழ். வருவார்களாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் விரும்பி னால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பான தமது யோசனைகளை பாரா ளுமன்ற தெரிவுக் குழுவின் முன் சமர்ப்பிக்க முடியும் எனவும் அல்லது தெரிவுக்குழுவினை விடுதலைப்புலிகள் யாழ்ப் பாணத்திற்கு அழைக்கலாம் எனவும் இது தொடர்பான விபரம் புலிகள் இயக்கத்தி ற்கு அனுப்பப்பட்டுள்ளதாக வும் கொழும்பு அரசியல் வட்டாரங்களை மேற் கோள்காட்டி வீரகேசரி செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தகவலை தெரிவுக் குழு உறுப்பினரே சர்வதேச செஞ் சிலுவைச் சங்கமூலம் புலிகளு க்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு

(4ஆம் பக்கம் பார்க்க)

## முப்படை உயர் அதிகாரிகள் பலாலி முகாம் வந்தனர்

இராணுவ நடவடிக்கைகள் பற்றி பேச்சு கொண்டு திட்ட மிட்டு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக முப்படை அதிகாரிகளும் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் விரை ந்துள்ளதாக இராணுவ வட் டாரங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

சேந்தான்குளம் பகுதி கைப் பற்றப்பட்டதனைத்தொடர்ந்து மூன்று ஆயுதப் படைகளை யும் சேர்ந்த முக்கிய அதிகாரி கள் தள நிலைகளை மேற் பார்வையிட்டு மதிப்பீடு செய்து அடுத்த நடவடிக்கை களை மேற் கொள்வதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பா ணம் வந்ததாக தெரிவிக்கப் படுகிறது.

கடற்படை, விமானப்படை பீரங்கிப் படகுகள் ஆகியவற் றின் உதவியுடன் தரைப்படை யினர் கடந்த வியாழன் ஒன் பது மணித்தியாலம் கடும் சமர் புரிந்தனர் இச்சமரில் 22 படை யினர் கொல்லப்பட்டும் 2 படையினர் காயமடைந்ததாக வும் பாதுகாப்பு வட்டாரங் கள் தெரிவித்தன.

## சந்திப்பு

[கொழும்பு]

கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை நாளை திங் கள் கொழும்பில் சந்தித்து உரையாட உள்ளன.

இப்பேச்சுக்களில் இனப் பிரச்சினைக்கான தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறி த்து இக்குழுக்கள் வலியுறுத்த உள்ளதாக தெரியவருகிறது.

இச்சந்திப்பில் ஜனாதிபதி யுடன் அமைச்சர்கள் சிலரும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வீதி விபத்து

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் நடை பெற்ற வீதி விபத்துக்களில் நான்கு பேர் படுகாயமடைந் தனர் இவர்கள் யாழ் போத னா மருத்துவமனையில் அவ சர சிகிச்சைப்பகுதியில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

மங்களேஸ்வரன்(20 வயது) வட்டுக்கோட்டை இ.கும ரப்பா (50 வயது) கே.கே எஸ்

(4ஆம் பக்கம் பார்க்க)



2-ம் லெப். இளையவன்



வீரவேங்கை அரசப்பன்

11-06-1992 அன்று நான்கு முனைகளில் முன்னேறமுயன்ற இராணுவத்துடனான மோத லில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண் டனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் வழுதி(மெல் மன் - விக்கிரசிங்கம் வியோகா னந்தராசா அம்பாறை வீதி, அக்கரைப்பற்று அம்பாறை), 2 ஆம் லெப்டினன் இளைய வன் (பாலன் கனகசபை குண ராசா, பாலைமுனை மண்டூர் மட்டக்களப்பு), வீரவேங்கை அரசப்பன் (இமனுவேல் தயாளன் புனித மரியாள் வீதி சில்லாலை) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இராணுவம் எதிர்பார்த்த வெற்றி புலிகளின் எதிர்ப்பால் கிட்டவில்லை

### வடக்கு ராணுவ நடவடிக்கை குறித்து பி. பி. ஸி.

(லண்டன்)

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கரையோரப் பிர தேசங்களில் கடந்த வாரங்க ளில் சிறிலங்கா இராணுவம் நடாத்திய இராணுவ நடவ டிக்கைகள் விடுதலைப்புலி களின் கடும் எதிர்ப்பினால் எதிர்பார்த்த வெற்றியை தர வில்லை என பி பி சி யின் சிங்களசேவை தனது செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

கரையோரப் பிரதேசங்கள் சிலவற்றை இராணுவம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது உண்மை தான் என்றாலும், இப்பகுதி களை இராணுவம்தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமா என்பது சந்தேகம் தான் ஏனென்றால் அண்மை யில் ஆனையிறவிலும் பூநகரிப் பகுதியிலும் புலிகள் ஊடுருவித் தாக்குதல்களை நடாத்தியுள் ளனர். தமது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளிலும்புலிகள் ஊடுருவித் தாக்கும் வல்லமை உள்ளவர்கள் என்பதனை இத் தாக்குதல்கள் காட்டுகின்றன.

விடுதலைப்புலிகளைப் பெரு மளவில் அழிப்பது அவர்களை பலவீனப் படுத்துவது தான் தமது நோக்கம் என இராணு வத் தரப்பில் சொல்லப்படுகி றது அந்த நோக்கத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிராம சேவையாளர் பரீட்சை யாழ். இல் நடைபெறவில்லை

(யாழ்ப்பாணம்)

கிராம சேவையாளர்களை தெரிவு செய்வதற்கான போட் டிப் பரீட்சை யாழ் மாவட் டத்தில் நேற்று நடைபெற வில்லை.

யாழ் மாவட்டத்திற்குரிய வினாத்தாள்கள் நேற்று எடு த்து வரப்படாமையினால் இங்கு இப்பரீட்சை நடைபெற வில்லை. மேலும் பரீட்சைக் குத் தோற்றும் பரீட்சார்த் திகள் காலை 8 30 தொடக் கம் மாலை 3. 00 மணிவரை காத்திருந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர் வினாத்தாள் கள் காலை எடுத்துவரப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

### விசேட பரீட்சை நடைபெறும்

வடபகுதியில் கிராமசேவை யாளர்களைத் தெரிவு செய் வதற்கான போட்டிப்பரீட்சை நடைபெறாத இடங்களிற்கு மிகவிரைவில் விசேட பரீட்சை ஒன்று நடாத்தப்படும் என யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மாகாணசபை உறுப்பினர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பொய்யானதாம்

மதவாச்சி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிசம்பந்தப்பட்ட கொலைகள், ஊழல்கள் என் பவற்றை வெளிப்படுத்த முன் வந்ததாலேயே வட மத்திய மாகாணசபை உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதி கொலை முயற்சி தொடர்பாக கைது செய்யப்பட்டார் என செய்தி கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் நடைபெறும் ஜனாதிபதி செய லகத்திற்கு வந்திருந்த சிறி லங்கா ஜனாதிபதியை கொலை செய்ய முயன்றார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### வீரவேங்கை பழனித்துரை

13-06-92 அன்று யாழ்ப் பாணத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த வீர வேங்கை பழனித்துரை (கார் த்திகேசு சேதீஸ்வரன், பூநகரி நெப்பிகுளம்) என்பவருக்கு தமி ழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித் துக் கொள்கின்றனர்.

## வரி விளம்பரம்

### அன்பை நினைவூட்ட

உங்கள் நினைவுகளை அன்பர்களின் 'ஆட்ரோகிராப்'பில் பதிக்க அழகிய பொன்மொழிகள் வேண்டுமா? இதோ "பொறுக்கிய முத்துக்கள்" பொன்மொழித் தொகுப்பு, தொகுப்பாசிரியர் 'கோட்பாய் ... சிவம்' விலை ரூபா பத்து. எல்லாப் புத்தகக்கடைகளிலும் கிடைக்கும். (2659)

### பெற்றுக் கொள்ளவும்

[யாழ்ப்பாணம்]

குருநகரைச்சேர்ந்த தம்பிராசா சுமதி [627732635V] கிறகரி காரி மெலா [546682838V] ஆகியோரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

### சமய சொற்பொழிவு

(கொழும்புத்துறை)

யாழ். கந்தர்மடம் ஸ்ரீசிவ குருநாதபீடம் வேதாந்தமடப் பரிபாலன சபையினர், ஒவ்வொரு மாதங்களிலும் வரும் பூரணைதினத்தன்று பிற்பகல் 3,30 மணிக்கு சமயப் பெரியார்களின் மூலம் சொற் பொழிவுகளை நடத்த ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

இச்சொற் பொழிவு இன்று 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். 'வீடும் வேண்டா விறல்'என்றதலைப்பில் திரு. க. சொக்கலிங்கம் உரையாற்றுவார். (24)

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் உப நூலகத்துக்கு அருகாமையில் இருந்து துணிப்பார்சல் ஒன்று என். ராகுலன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## 45 கிராமசேவையாளருக்கு எதிராக வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட கிராமசேவையாளர் 45 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்வதற்கு இலஞ்ச ஆணையாளர் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு கிராம சேவையாளர்களுக்கு எதிராக மேல் நீதி மன்றத்தில் பதினொரு வழக்குகளும் மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்க அறிவித்தல்

**சுகாதார சேவைகள்**

**பிராந்திய திணைக்களம், யாழ்ப்பாணம்.**

பாவிக்கமுடியாத நிலையில் உள்ள மின்இயந்திரம் 10 கேவிஏ (லம்பாடினி) 220 வி மேற்படி காரியாலயத்தில் 18 06.1992 திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஆகக் கூடிய விலை கோருபவர் உடனடியாக முழுப் பணத்தையும் செலுத்தி, அதே தினம் பிற்பகல் 3-30 மணிக்கு முன் காரியாலயத்தில் இருந்து அம் மின் இயந்திரத்தை அகற்ற வேண்டும். நேரில் பார்க்க விரும்புபவர்கள் 17.06.92ல் முற்பகல் 10-00 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் இடையில் எனது காரியாலயத்தில் பார்வை இடலாம்.

வைத்திய கலாநிதி பி. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்திய
பணிப்பாளர். யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/ 4534)

## ஓராண்டு நினைவஞ்சலி



மடியில் முத்து
23.09.1973
மண்ணின் வித்து
14.06.1991

## லெப்டினனட் றஜின்

(பொன்னுத்துரை கிரிதரன்)

நாவற்குழி

ஆண்டொன்று ஆனதடா ஆசைத்தம்பிஉன் ஆவியகன்று
ஆறிடுமா எமது துயர் ஆற்றிட நீயே வரவேண்டும்
இரண்டாண்டு ஆனதடா எமதில்லப்படி நீ தொட்டு

## நினைவு கூருகின்றோம்...
## 1992-06-14

1986-ம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி திருவையாற்றுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின்போது நிகழ்ந்த எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தம்பா / சூட்டி** (இராமசாமி சங்கரப்பிள்ளை- தர்மபுரம் கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட முல்லைத்தீவு முள்ளியவளையைச்சேர்ந்ததமிழ்ப்பொதுமகன்.

1987-ம் ஆண்டு குரும்பசிட்டியில் சிறிலங்கா இராணுவ மினி முகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரச்சாவெய்திய-

**குமரிநாடன்** (சிறிரங்கம் விஜயபாலன் - ராஜபுரம் முழங்காவில், மன்னார்)

**லெப் மதி** (இராசையா சிறிபத்மநாதன் - மானிப்பாய் வடக்கு)

**2.ம் லெப்.வின்சன்** (தியாகராசா ஞானகுமார்- கரணவாய் தெற்கு)

**தேவன்** (சற்குணராசா தேவராசா - சங்கானை மேற்கு வடலியடைப்பு)

**மஜீத்** (வரதராசா மங்களேஸ்வரன்- பொன்னாலை சுளிபுரம்)

**சிக்கந்தன்** (சின்னத்தம்பி சேனாதிராசா - பாஸ்கரன் - பாஸ்கரன் வீதி, கொக்குவில் கிழக்கு)

வடமராட்சிப் பகுதியில், சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட 'ஒப்பறேசன் லிபறேசன்' நடவடிக்கையின்போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பூசாமுகாமில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட இதேபகுதியைச்சேர்ந்த 12-தமிழ் இளைஞர்கள்.

1989-ம் ஆண்டு கிளிநொச்சி வட்டக்கச்சிப்பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**2.ம் லெப்.தாஸ்** (செல்லப்பு விக்னேஸ்வரன் -142, உருத்திரபுரம், கிளிநொச்சி)

கிளிநொச்சி பழைய முறிகண்டிப்பகுதியில் இந்தியப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**லெப். கதிரவன்** (கோவிந்து தேவராசா - குமரபுரம், கிளிநொச்சி)

1990-ம் ஆண்டு மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**லெப். சுதர்சன்** [சிவலிங்கம் ரவீந்திரன் - கிரான் மட்டக்களப்பு]

திருக்கோணமலை /உப்புவெளி 3-ம் கட்டைப்பகுதியில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**முருகதாஸ்** [பஞ்சலிங்கம் புஸ்பாகரன் - சாம்பல் தீவு திருக்கோணமலை]

திருக்கோணமலை கிண்ணியாப்பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தேவா** [ஞானப்பிரகாசம் விக்னேஸ்வரன் -சிப்பித்திடல் தம்பலகமம், திருக்கோணமலை]

**அன்ரன்** [இ. வசந்தகுமார் -முள்ளிப்பொத்தானை திருக்கோணமலை]

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**கப்டன் கஜன்** [தியாகராஜா பொன்னம்பலம் - மாமடு, நெடுங்கேணி, மணலாறு]

## 89-ம் நாள் அந்தியேட்டியும் திதியும்



அன்னைமடியில்
22 - 12 - 1970
முருகன் மலரடியில்
19 - 03 - 1992
திதி: 15-06-1992

## உருத்திரா - கப்டன் பாவலன்

(சற்குணநாதன் ஜீவரத்தினம்)

தமிழீழம் புலிகளின் தாகம்
விழுமிய வளம்மலி கீதம்
இதய நாதமாய் இயைந்து
இயங்கு நரம்பின் மின்னலையாய்
பாய்ந்து பரவ உடல் பொருள்
ஆய்தோர் ஆவியும் உன்தேயம்மா
தமிழீழத் தாயே தூய் எம்
தமிழில் சமர்ப்பணம் தானிணையில்
என்றினிது கூறிச்சென்ற மகனே
பொன்னே எங்கள் அன்பின் ஜீவா!

நானும் நெஞ்சுரன் வாய்ந்திடு
என்தோழரும் எழுகின்ற வெஞ்சமரில்
ஆழிசூ ழுலகில் சிற்றினமாயும்
வாழும் லங்காவில் பேரினமாயும்
வரலாற்று சிம்மத்தின் சந்ததியை
விரட்டியடித்து நம்மண் ணிலிருந்து
நேராகவே காலனுலகு காட்டி
நாமே நமக்காக நாட்டுவோம்
நந்தமிழ் ஈழமெனப் போந்தாயே
எந்தையர் மரபின் வீரமகனே!

மங்காப் புகழ்தங்கு மயிலிட்டியில்
பொங்கு வீரமாணிக்கதேவன்
பரம்பரை தந்திடு வீரமணியே
விரைந்து மணலாற்றில் மண்டிய
வரலாற்றுப் போரினில் முன்னின்று
திறன்கொண்ட வீரனாய்ச் சாதித்த
தீரச் செயல் கேட்டு களைந்தோம்
பிரிவின் துயரினை யெல்லாம்
உவந்தோம் உருத்திரா எம்மகனே
தவத்திரு கப்டன் பாவலனே!

கண்டத்தில் காலனைக் கட்டி
எண்டிசையும் அதிர்ந்து நிலைகெட
எதிரியின் உடல்களை கிழித்து
உதிரம் சீறியே பாயவும்
அரிய படைக்கலம் மீட்டும்
போரினில் வெற்றிகாணு மமயம்
நந்தமிழ் ஈழம் நலமுறமலரும்
அண்மி வந்திடு அரியகாலம்
அஞ்சா நெஞ்சில் காயமேந்தி
விஞ்சு புகழுடன் போந்தாயோ!

மாவீரா எம்தருமை மகனே!
மண்ணில் நீயுகுத்த குருதி
துளியொவ் வொன்றும் ஆயிரமாய்
முளைவிட்டு தோன்றுமே வீரராய்

செய்துள்ளனர்.

இச்சொற்பொழிவு இன்று 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். 'வீடும் வேண்டா விறல்' என்றதலைப் பில் திரு. க. சொக்கலிங்கம் உரையாற்றுவார். (24)

## கண்டெடுக்கப் பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

சொக்குவில் உப நூலகத் துக்கு அருகாமையில் இருந்து துணிப்பார்சல் ஒன்று என். ராகுலன் என்பவரால் கண் டெடுக்கப்பட்டு எமது காரி யாலயத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளது. உரியவர்கள் ஆதா ரம் காட்டிப் பெற்றுக்கொள் ளவும்.

அத்துடன் அல்வாயைச் சேர்ந்த இரத்தினேஸ்வரி சண்முகசுந்தரம் என்பவரு டைய அடையாள அட்டை ஒன்றும் (425350463V) கண் டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் பெற் றுக் கொள்ளவும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

பட்டப்பின் கல்வி டிப்ளோமா

பகுதி நேர/முழு நேர

## அனுமதித் தேர்வு

மேற்குறித்த நெறிக் கான அனுமதிப்பரீட்சை 21/06/92 (ஞாயிறு) யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தில் காலை 9.00 மணி க்கு நடைபெறவுள்ளது, தகுதியான பரீட்சார்த்தி களுக்கு தபால் மூலம் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. உரிய நேரத்தில் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதோர் 20.06.92 இற்கு முன் கிழமை நா ட்களில் வழமையான காரியாலய நேரத்தில் யாழ் பல்கலைக்கழகபரீ ட்சைக்கிளையுடன் தொ டர்பு கொள்ளவும்,

-பதிவாளர்.

(சி/4533)



மடியில் முத்து
23.09.1973
மண்ணின் வித்து
14.06.1991

## லெப்டினன்ட் றஜின்

(பொன்னுத்துரை கிரிதரன்)

நாவற்குழி

ஆண்டொன்று ஆனதடா ஆசைத்தம்பிஉன் ஆவியகன்று
ஆறிடுமா எமது துயர் ஆற்றிட நீயே வரவேண்டும்
இரண்டாண்டு ஆனதடா எமதில்லப்படி நீ தொட்டு
உயிருடனும் வரவில்லை உயிரற்றும் நீ வரவில்லை.
பிறப்பிலே இரட்டையனாய் படிப்பிலே சிறந்தவனாய்
அறிவினிலே ஆசானாய் களத்திலே மறவனாய்
பெற்றவர் உனைநினைத்து விம்முகிற வேளையிலும்
செய்தோம் எம்பங்கினையென தணிக்கின்றனர்
-தம்துயரை
சிறப்புப்படையணியில் நீ சீராகச் செய்தபணி
வவுனியா மண்ணிலே பெரு விருட்சமாகி நிற்குதடா

அருள் வீதி
நாவற்குழி

துயரில் வாடும் பெற்றோர்
சகோதரர், சகோதரிகள்

[2660]

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணி
காட்சிகளாகக் காண்பிக்கப்படுகின்றது.

VIPER

(வஞ்சக தன்மையுடைய ஒருவன்)

(சி/4538)

யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம்
வரைவுள்ளது

## முக்கிய அறிவித்தல்

### அங்கத்தவராகுதல்

30-6 92 வரை உள்ள அங்கத்துவப் பதிவேட்டின் அடிப்படையில் வாக்காளர் பதிவேடு மூடப்பட இருப் பதால், அனைவரையும் தங்கள் கிளைகளுடன் தொடர்பு கொண்டு அங்கத்தவராகுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

யாழ். ப. நோ. கூ. சங்கம்.
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
10-06-92

பு. நவரத்தினம்
செயலாளர்

[சி/4537]

பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சா வெய்திய-

**லெப். சுதர்சன்** [சிவலிங்கம் ரவீந்திரன் - கிரான் மட்டக்களப்பு]

திருக்கோணமலை /உப்புவெளி 3-ம் கட்டைப்பகுதி யில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச் சாவெய்திய-

**முருகதாஸ்** [பஞ்சலிங்கம் புஸ்பாகரன் - சாம்பல் தீவு திருக்கோணமலை]

திருக்கோணமலை கிண்ணியாப்பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சா வெய்திய-

**தேவா** [ஞானப்பிரகாசம் விக்னேஸ்வரன் -சிப்பித் திடல் தம்பலகமம், திருக்கோணமலை]

**அன்ரன்** [இ. வசந்தகுமார் -முள்ளிப்பொத்தானை திருக்கோணமலை]

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**கப்டன் கஜன்** [தியாகராஜா பொன்னம்பலம் - மாமடு, நெடுங்கேணி, மணலாறு]

**லோலோ** [செல்லத்துரை சிவதாசன் -பெரியகுளம், நெடுங்கேணி, மணலாறு]

**மேஜர் சிங்கன்** [இராசையா மகேந்திரன் 4-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு]

**சிறி** [சுப்பிரமணியம் வரதன்-ஒட்டிசுட்டான் முல்லை த்தீவு]

**சசி\சிறி** [வல்லிபுரம் குணபாலசிங்கம்-முள்ளியவளை முல்லைத்தீவு]

**மகான்** [செல்லத்துரை சிவகுமார்- கல்கமிகுளம், செட்டிகுளம், வவுனியா]

**சுரேன்** [சந்தையா சிவபாலன்-துடரிக்குளம் வீதி, செட்டிகுளம், வவுனியா]

**கப்டன் பெனா** [தம்பிஐயா சசிந்திரன்-புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி]

**காமினி** [பீற்றர் செல்வராஜ் - டிப்போ வீதி, கிளிநொச்சி]

**சர்வா** [சுப்பையா குகனேஸ்வரன்- 173, யோகபுரம், கிளிநொச்சி]

**முகமட்** [ஐயாத்துரை குமாரதாசன்- கட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி]

**வதனன்** [வட்டக்கச்சி, கிளிநொச்சி]

**கப்டன் வினோத்** [சின்னத்தம்பி விக்னேஸ்வரன்]

கிளிநொச்சியில், சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சா வெய்திய-

**ரகுவரன்** (முருகேஸ்இசைமாலைத்தாழ்வு,மன்னார்)

**லெப்.ரஞ்சன்** (பொ. சண்முகநாதன் -சன்னாசிப் பரந்தன்)

ஆனையிறவில், சிறிலங்கா இராணுவத்தினருட னான மோதலில் வீரச்சாவெய்திய-

**குரே**

இதே ஆண்டு சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**அர்ஜுன்** (ஒட்டமாவடி, மட்டக்களப்பு)

**கலையன்** [சச்சுமுகமது அபுல்கசன்- 1-ம் வட்டாரம் புல்மோட்டை, திருக்கோணமலை]

**நளன்** (தியாகராசா உதயகாந்தன் - கொக்குத் தொடுவாய், மணலாறு)

1991ஆம் ஆண்டு வவுனியா செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச் சாவெய்திய-

**2.ம் லெப்.வசுமதி** [தவநாயகி இராசநாயகம்- கற்சிலைமடு, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு]

பொங்கு வீரமாணிக்கதேவன்
பரம்பரை தந்திடு வீரமணியே
விரைந்து மணலாற்றில் மண்டிய
வரலாற்றுப் போரினில் முன்னின்று
திறன்கொண்ட வீரனாய்ச் சாதித்த
தீரச் செயல் கேட்டு களைந்தோம்
பிரிவின் துயரினை யெல்லாம்
உவந்தோம் உருத்திரா எம்மகனே
தவத்திரு கப்டன் பாவலனே!

கண்டத்தில் காலனைக் கட்டி
எண்டிசையும் அதிர்ந்து நிலைகெட
எதிரியின் உடல்களை கிழித்து
உதிரம் சீறியே பாயவும்
அரிய படைக்கலம் மீட்டும்
போரினில் வெற்றிகாணு மமயம்
நந்தமிழ் ஈழம் நலமுறமலரும்
அண்மி வந்திடு அரியகாலம்
அஞ்சா நெஞ்சில் காயமேந்தி
விஞ்சு புகழுடன் போந்தாயோ!

மாவீரா எம்தருமை மகனே!
மண்ணில் நீயுகுத்த குருதி
துளியொவ் வொன்றும் ஆயிரமாய்
முளைவிட்டு தோன்றுமே வீரராய்
உனது மாபணி பூரணமாய்
மலருமே நந் தமிழ் ஈழமாய்!
முனையன் வளவுறை முருகவேள்
இணைபாத மலரடி அணைந்து
பார்த்து மகிழ்வாய் தமிழீழம்
போற்றிப் பணிந்தோம் அவன்பாதம்.

நாளை 15.06 92 எங்கள் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளும்படி சக போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அப்பா, அம்மா
பெரியப்பா, பெரியம்மா
சித்தப்பாமார், சின்னம்மாமார்
மாமாமார், மாமிமார்

வழக்கம்பராய், அண்ணன்மார், தம்பிமார்
அம்மன் கோவிலடி, அக்காமார். தங்கைமார்
சுழிபுரம். மச்சான்மார், மச்சாள்மார்.

(2650)

**கப்டன் சுஜாத்தா** [அனுசியா யோகராசா- அல் வாய் மேற்கு, பருத்தித்துறை]

**லெப். ஜெயசீலி** [தர்சினி சுந்தரலிங்கம் -ராதா கிசன் சென்ரர், பருத்தித்துறை]

**2.ம் லெப். அருணா** (நவமணி சின்னையா- கொடிகாமம் வீதி, புலோலிதெற்கு,பருத்தித்துறை)

**ஜீவமலர்** [சிறி துளசி கணேச சுந்தரம்- 36 ஏ, அரசடி வீதி, நல்லூர்]

வவுனியா- பூவரசங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**பிறேமன்** [திசைவீரசிங்கம் தவேந்திரன் கனகரா யன்குளம் வவுனியா]

**ராஜின்** (பொன்னுத்துரை, கிரிதரன் அருள் வீதி நாவற்குழி, கைதடி)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட செங் கலடி-2ச் சேர்ந்த குழந்தை, வந்தாறுமூலை லேக்க வுஸ்வீதியைச் சேர்ந்த சிறுவன், மாவடி வேம்பைச் சேர்ந்த இளைஞன் ஆகிய3- தமிழர்கள்— வாழைச் சேனை நாகிவன் பகுதியில் சிறிலங்காப் படையின ரால் வெட்டிக் கொல்லப்பட்ட 6- தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4543)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

முனைப்பான கவனமே என் குறிக்கோள்
முதலில் கண்ணியம், அடுத்து ஊக்கம்,
அடுத்து முனைப்பான கவனம்.

— ஆன்ட்ரு கார்னகி

ஈழநாதம்

81, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் 14-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 65

## காலம் கடத்த வேண்டும் ஒரு புதிய முயற்சி

வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அப்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் யோசனைகளைப் பெறுவதில் அரசாங்கம் பெரும் ஆர்வம் கொண்டுள்ளதாக அரசாங்கத்தின் முக்கிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் இதற்காகவே சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா 15 ஆம் திகதி இவ் அரசியற் கட்சிகளை சந்திக்கவுள்ளதாகவும் மேற்படி அரசியற் கட்சிகளின் மாநாட்டை கூட்டவுள்ளார் என்றும் இதன் மூலம் பிரச்சினையை நன்கு பரிசீலித்த பின்னர் அரசாங்கம் தீர்வு குறித்து ஓர் முடிவிற்கு வரும் எனவும் அப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கை இன்று பிரதிநிதித்துவப்படுத்துவோருடன் பேசப் போவதான இவ் அறிவிப்பு, இப்பிரதிநிதிகள் யார்? எவருடன் அரசாங்கம் இன்று பேசப் போகின்றது? என்பன போன்ற கேள்விகளை எழுப்பியுள்ளது.

அரசாங்கத்தின் நோக்கில் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களால் பிரதிநிதித்துவப் படுத்துவோர் என்பவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பேரில் போட்டியிட்ட கொழும்பில் தரித்துள்ள தமிழ்க் குழுக்கள், முஸ்லிம் காங்கிரஸ் என்பவர்களேயாகும்.

இவர்கள் யாவரும் வடக்கு கிழக்கு மக்களின் பிரதிநிதிகளா என்பது முதல் கேள்வி. இந்திய இராணுவத்தின் மிரட்டலுக்கும், ஜனநாயக விதிமுறைகளுக்கு முரண்பட்ட வகையிலும் நடத்தப்பட்ட மோசடியான தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களே இப்பிரதிநிதிகள் ஆகும். சரி, இந்திய இராணுவத்தின் அச்சுறுத்தலுக்கும், ஆயுத முனையிலும் நடைபெற்ற இத்தேர்தலை ஏற்றுக் கொள்ளவதாகவும் வைத்துக் கொள்வோம். அவ்வாறானாலும், கொழும்பிலுள்ள இக்கட்சிகள் - ஐ தே. கட்சி - சிறில. சு. கட்சி, த. வி. கூட்டணி அ. இ. மு. காங்கிரஸ் - வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனவா?

யாழ். மாவட்டத்தில் உள்ள 12 தொகுதிகளில், ஒன்பது தொகுதிப் பிரதிநிதிகள் தற்பொழுது பாராளுமன்றம் செல்வதில்லை அவர்கள் கொழும்பு சென்று தேர்தல் ஆணையாளரிடம் பதிவு செய்து கொண்ட போதும் சிறிலங்கா அரசாங்கம் அவ் எம். பி க்கள் சத்தியப் பிரமாணம் செய்யவோ அன்றி பாராளுமன்றக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளவோ கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவில்லை. புதிய எம். பி.க்கள்

# இந்திய - இஸ்ரேல் உறவில் நெருக்கம்; இராணுவ ஒத்துழைப்புக் குறித்து ஆராய்வு

நீண்ட காலமாக இந்தியாவிற்கு ஆயுதங்களை வழங்கி வந்த சோவியத் யூனியனின் முறிவைத் தொடர்ந்து தன்னுடைய ஆயுதத் தேவைகளுக்காக இந்தியா தனது புதிய நண்பனான இஸ்ரேலின் உதவியை நாடியுள்ளது.

இஸ்ரேலுடன் இந்தியா கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னரே ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது இது தொடர்பான பல முக்கிய தகவல்களை இந்தியா மற்றும் சர்வதேசப் பத்திரிகைகள் தற்போது பரபரப்பாக வெளியிட்டு வருகின்றன.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இஸ்ரேலின் முக்கிய ஆயுத உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்களைக் கொண்ட உயர்மட்ட குழு ஒன்று செய்தியாளர்களுக்கு எட்டாத விதமாக இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர். இது தொடர்பான தகவல்கள் இப்போதுதான் வெளியாகியுள்ளன.

ஒருவாரகால விஜயமொன்றை மேற்கொண்டு டில்லி வந்திருந்த இக் குழுவினர் இந்தியாவின் பாதுகாப்புச்சபையின் உயர் அதிகாரிகளுடனும், ராணுவ, கடற்படை, விமானப்படை, உயர் அதிகாரிகளுடனும் இரகசியமான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்,

இஸ்ரேலின் பாதுகாப்பு தளபாட ஏற்றுமதி அமைப்பின் தலைவர் தலைமையில் இந்தியா வந்திருந்த இக் குழுவினர் இந்தியாவின் பாதுகாப்பு தளபாட உற்பத்தித் திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்பு ஆராய்ச்சி--அபிவிருத்தி அமைப்பின் அதிகாரிகள் ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தியாவுடன் ஆயுத விற்பனையில் ஈடுபடுவதற்கு இஸ்ரேல் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என இந்திய பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அவர்கள் பல்வேறு விதமான ஆயுதங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளார்கள் எனவும் இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன

ஆனால், இவ்விடயத்தில் அவசரப்பட்டு முடிவொன்றை மேற்கொள்வதாக இந்தியாவின் பிரதிபலிப்பு இருக்கவில்லை. ஆனால் முப்படைகளின் தளபதிகளும் மிகவும் நீளமான 'ஷொப்பிங்லிஸ்ட்'' ஒன்றைத் தயாரித்து வைத்துள்ளனர். ஆனால் இந்த விடயத்தில் சிறிது அடக்கமான போக்கொன்றைக் கடைப்பிடிக்கவே அரசாங்கம் விரும்புகின்றது.

நடுத்தர, மற்றும் உயர்தர தொழில் நுட்பங்களைப் பொறுத்தவரையில் இஸ்ரேல் மிகவும் முன்னேற்றமான ஆயுதங்களைக் கொண்டிருப்பதாக இந்திய ராணுவ, விமானப்படை அதிகாரிகள் இந்திய அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கின்றனர்.

இவை தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் ஏவுகணைகள், நீண்ட தூரம் செல்லக் கூடிய தன்னியக்கத் துப்பாக்கிகள், வெடிமருந்துகள், துப்பாக்கி ரவைகள் போன்றனவாகும். தாக்குதலுக்குப் பயன் படுத்தப்படாத ஆயுதங்களைப் பொறுத்த வரையில், ராடார் போன்றவையும் அடங்குகின்றன. இவை மிகவும் நுட்பமானமுறையில் தயாரிக்கப்பட்டவையாகும்.

இவ்வாறான ஆயுதங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான சிறந்த தொழில் நுட்பம் இந்தியாவிடம் இல்லை இதனால் இந்தவகையான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படவேண்டியதன் அவசியத்தை முப்படைத்தளபதிகள் இந்திய அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறியுள்ளனர்.

பாதுகாப்பு தளபாடங்களை ஏற்றுமதி செய்வதை விட இந்தியாவின் பாதுகாப்பைக் கருதிய வேறு சில உதவிகளையும் தன்னால் செய்ய முடியுமென இஸ்ரேலிய தூதுக்குழுவினர் இந்தியாவிடம் உறுதி அளித்திருக்கின்றனர்.

இவற்றில் முக்கியமானது பாகிஸ்தானுடனான இந்திய எல்லையில் தடை வேலியை அமைத்தலாகும். இதற்கான வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டபோதிலும் அது மிகவும் மந்த கதியிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

பாகிஸ்தானிய தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் சில குழப்பவேலைகளே இவ் வேலியை அமைப்பதற்கு முக்கிய தடையாக உள்ளதாகக் கூறப்படுகிறது. இதனை வெற்றி கொள்வதற்காகவே தன்னுடைய ஆலோசனையை வழங்க இஸ்ரேல் முன்வந்துள்ளது.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படுகின்ற ஆயுதங்களைப் பயன் படுத்தும் போதும் இஸ்ரேலுடன் கூட்டான சில முயற்சிகளை மேற்கொள்வதற்கே இந்தியா விரும்புகின்றது ஏனென்றால் அந்த ஆயுதங்கள் இந்தியாவுக்கும் புதியனவாகும். ஆரம்பத்தில் குறிப்பிட்ட சில காலத்திற்கு இஸ்ரேலின் துணையுடனேயே இந்தியா இவற்றைப் பயன் படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும்.

இதனுடன் கலவரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான இயந்திரங்களையும் இந்தியாவிற்கு வழங்குவதற்கு இஸ்ரேல் முன்வந்துள்ளது. அத்துடன் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளினதும் இஸ்ரேல் தனது நிபுணத்துவ சேவையை வழங்கவுள்ளது. தேவை ஏற்பட்டால் இந்தியர்களுக்கும் இவற்றில் இஸ்ரேல் பயிற்சி வழங்கும்.

இவற்றை விட ராணுவ பாதுகாப்பு விடயங்களில் கூட்டு ஆய்வையும் அபிவிருத்தியையும் மேற்கொள்வதற்கும் இப்போது இரு நாடுகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இரண்டு நாடுகளும் நிதிப்பிரச்சினையை எதிர் நோக்குவதாலும், பொதுவான கேந்திர நலன்களின் அடிப்படையிலேயே இதனை மேற்கொள்ள முடியுமென இருநாடுகளும் கருதுகின்றன.

இஸ்ரேல் ஏவுகணைகள் தூரத்திலிருந்தே இயக்கக் கூடிய விமானங்கள் தாக்குதல் விமானங்கள் போன்றவைகளையிட்டு விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது இத்துறைகளில் கூட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இந்தியா தரப்பினரும் விரும்புவதாகத் தெரிகின்றது.

இஸ்ரேலுடன் இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய இக் கூட்டுறவு இந்திய ஆயுதப்படைகளின் தரத்தை உயர்த்த உதவுவதுடன் பாகிஸ்தானுக்கும் ஒரு பயமுறுத்தலாகவே இருக்கும் என்றுதான் சொல்ல வேண்டும்.

- நன்றி: வீரகேசரி

### யாசிர் அரபாத்தின் பாதுகாப்பு அதிகாரி

# பெஸிசோ பாரிசில் சுட்டுக் கொலை ராஜதந்திர உறவில் சிக்கல் நிலை

[பாரிஸ்]

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தின் உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் கடந்த திங்களன்று பிரான்சின் தலைநகர் பாரிஸில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு வெளியே சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

அதீப பிசோ என்ற இந்த அதிகாரியின் கொலைக்கு இஸ்ரேலிய உளவுச் சேவையான மொசாட் தான் காரணம் என்று பாரிஸில் பாலஸ்தீன விடுதலை இயக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேலிய மொசாட் படையே இதற்கு காரணம் என அரபாத் கூறிய கூற்றை பாரிசிலும் ஜெருசலத்திலுமுள்ள இஸ்ரேலிய அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இதுதொடர்பாக நான் எதையும் கூறுவதற்கில்லை எனக்கு எதுவுமே தெரியாது என இஸ்ரேலியப்பிரதமர்

களை பழிவாங்க இஸ்ரேலிய பிரஜைகளை கொன்றவர்கள் கடத்தியவர்கள் ஆகியோரை வேட்டையாடுவதை இஸ்ரேல் பகிரங்க கொள்கையாக கொண்டுள்ளது.

பீ- எல். ஓ தலைமையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போராட்டமேஇக்கொலைக்கு காரணமென இஸ்ரேலிய தூதரக அதிகாரி டேவிட் டகோன் கூறியுள்ளார்.

இதனால் இஸ்ரேல்- அரபுப்

# இந்திய ராஜதந்திரத்தில் முரண்பாடு நிலவுகின்றது

(டில்லி)

அயல் நாடுகளுடனான உறவில் இந்தியாவின் ராஜதந்திரம் முரண்பாடான தன்மையைக் கொண்டிருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீனாவுடனும், பங்களாதேசுடனும், ஆக்கபூர்வமான பேச்சுக்களில் நரசிம்மராவ் அரசு ஈடுபட்ட அதே வேளையில் பாகிஸ்தானுடன் ராஜதந்திர யுத்தம் ஒன்றிலும் ஈடுபட்டிருப்பதைச்சுட்டிக்காட்டியே இவ்விதம் தெரிவிக்கப்படுகின்றது

இந்தியக் குடியரசுத்தலைவர் வெங்கட்ராமன் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயமும், பங்களாதேசப் பிரதமர் பேகம் காலிதா ஸியா இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயமும் இந்தியாவுக்கு சாதகமாக இருக்கும் அதேவேளை, பாகிஸ்தானுடன் ஏற்பட்ட சர்ச்சை இதற்கு எதிரானதாக இருப்பதாகவும் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மையில் இந்திய ராஜதந்திரியான ராஜேஷ் மித்தல் பாகிஸ்தான் புலனாய்வு உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டது தெரிந்ததே.

திரக் கட்சியினர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பேரில் போட்டியிட்ட கொழும்பில் தரித்துள்ள தமிழ்க் குழுக்கள், மூஸ்லிம் காங்கிரஸ் என்பவர்களேயாகும்.

இவர்கள் யாவரும் வடக்கு கிழக்கு மக்களின் பிரதிநிதிகளா என்பது முதல் கேள்வி. இந்திய இராணுவத்தின் மிரட்டலுக்கும், ஜனநாயக விதிமுறைகளுக்கு முரண்பட்ட வகையிலும் நடத்தப்பட்ட மோசடியான தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களே இப்பிரதிநிதிகள் ஆகும். சரி, இந்திய இராணுவத்தின் அச்சுறுத்தலுக்கும், ஆயுத முனையிலும் நடைபெற்ற இத்தேர்தலை ஏற்றுக் கொள்ளவதாகவும் வைத்துக் கொள்வோம். அவ்வாறானாலும், கொழும்பிலுள்ள இக்கட்சிகள் - ஐ தே. கட்சி - சிறில. சு. கட்சி, த. வி. கூட்டணி அ. இ. மு. காங்கிரஸ் - வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனவா?

யாழ். மாவட்டத்தில் உள்ள 12 தொகுதிகளில், ஒன்பது தொகுதிப் பிரதிநிதிகள் தற்பொழுது பாராளுமன்றம் செல்வதில்லை அவர்கள் கொழும்பு சென்று தேர்தல் ஆணையாளரிடம் பதிவு செய்து கொண்ட போதும் சிறிலங்கா அரசாங்கம் அவ் எம். பி க்கள் சத்தியப் பிரமாணம் செய்யவோ அன்றி பாராளுமன்றக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளவோ கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவில்லை. புதிய எம். பி.க்களின் பாதுகாப்பும், தங்குமிட வசதியும் கோரியபோதும் பிரேமதாசா அரசாங்கம் அவற்றைச் செய்து கொடுக்க மறுத்தது.

இந்நிலையில் வடக்கு கிழக்கு பிரதிநிதிகள் யார்? அரசாங்கம் யாருடன் பேச்சு நடத்தப் போகின்ற கொழும்பிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் வடக்கு கிழக்கை பிரதிநிதிப் படுத்துவோர் என அரசு எவ்வாறு கொள்ள முடியும். மக்களிடம் வரமுடியாதவர்கள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகள் என்று எவ்வாறு கூற முடியும்.

இதைத்தவிர வடக்கு - கிழக்குப் பிரதிநிதிகளிடம் அரசாங்கம் புதிதாகக் கோருவதற்கும், அதன் மூலம் தீர்வு ஒன்றிற்கு வரமுற்படும் என்பதும் வேடிக்கையாக இருக்கின்றது. இனப்பிரச்சினை கூர்மையடையத் தொடங்கியதில் இருந்து சிறிலங்கா அரசாங்கம், குறிப்பாக ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் இப்பிரச்சினை தொடர்பாக பலதடவை பேச்சுக்களை நடத்தியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனா காலத்தில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும்- இந்தியாவிலும் - இப்பிரச்சினை தொடர்பாகப் பேசப்பட்டது. பின்னர், தற்போதைய ஜனாதிபதி காலத்திலும், சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு எனவும், நேரடிச் சந்திப்புக்கள் மூலமும், வடக்கு - கிழக்குப் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டது. ஆனால், எதிலும் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பான அரசியல் நடவடிக்கை எதுவும் சற்றுத்தானும் நகரவில்லை.

இந்நிலையில் பிரதிநிதித்துவப்படுத்துவோர் எனக் கூறிக்கொள்ளும் சிலரிடம் ஆலோசிப்பதற்கு என்ன இருக்கின்றது? அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக்கூறிக்கொள்ளும் ஐக்கிய தேசிய கட்சியினரிடம் கேட்பதற்கு அரசாங்கத்திற்கு என்ன இருக்கின்றது? பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கே தீர்வுதிட்டத்தை சமர்ப்பிக்காத ஐ தே. கட்சியிடமும், சிறிலங்கா சு. கட்சியிடமும் பிரச்சினை தீர்விற்கான எதனை ஆலோசனையாக வழங்கப் போகின்றார்கள்.

அதாவது, வடக்கையும், கிழக்கையும் பிரதிநிதித்துவப்படுத்துவோருடன் பேசி ஜனாதிபதி பிரேமதாசா முடிவு எடுக்கப் போகின்றார் என்பது வெறும் ஏமாற்று நடவடிக்கையே ஆகும். சர்வகட்சி மாநாடு தோல்வியில் முடிவுற்று வந்த வேளையில், பாராளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது போன்று தற்போதைய புதிய திட்டம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு அடுத்த சட்ட நடவடிக்கையோ என எண்ணத் தோன்றுகின்றது காலத்தை இழுத்தடித்தல் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட சிறிலங்கா அரசாங்கத்திற்கு இது அவசியத் தேவையும் கூட.

யாசிர் அரபாத்தின் பாதுகாப்பு அதிகாரி

# பெஸிசோ பாரிசில் சுட்டுக் கொலை ராஜதந்திர உறவில் சிக்கல் நிலை

[பாரிஸ்]

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தின் உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் கடந்த திங்களன்று பிரான்சின் தலைநகர் பாரிஸில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு வெளியே சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

அதீப பிசோ என்ற இந்த அதிகாரியின் கொலைக்கு இஸ்ரேலிய உளவுச் சேவையான மொசாட் தான் காரணம் என்று அரபாத் குற்றஞ்சாட்டியுள்ளார். ஜோர்தான் தலைநகர் அம்மானில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அரபாத், அதீப் ஐரோப்பாவிற்கு செல்ல முன்னர் மொசாட் குறித்து அவருக்கு நான் எச்சரிக்கை செய்திருந்தேன். ஆனால் இறுதியில் மொசாட் ஏஜெண்டுகள் அவரைக் கொலை செய்து விட்டனர் எனத் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தியவர்கள் சைலன்சர் ஒன்றைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்களை அடையாளம் காணுவதற்கு முன்னர் அவர்கள் தப்பிச் சென்று விட்டனர் என்று பாரிஸில்பாலஸ்தீன விடுதலை இயக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேலிய மொஸாட் படையே இதற்கு காரணம் என அரபாத் கூறிய கூற்றை பாரிசிலும் ஜெரூசலத்திலுமுள்ள இஸ்ரேலிய அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இதுதொடர்பாக நான் எதையும் கூறுவதற்கில்லை எனக்கு எதுவுமே தெரியாது என இஸ்ரேலியப்பிரதமர் இட்ஷாக் ஷமீர் கூறியுள்ளதுடன் இஸ்ரேலிய இராணுவ உளவுப் பிரிவுத் தலைவர் யூரி சாகி பெஸிஸோ கொல்லப்பட்டது தமக்கு வருத்தத்தை அளிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

மேலும் பெஸிஸோ கறுப்பு செப்டம்பர் இயக்கத்தின் ஓர் அங்கத்தவர் 1972ஆம் ஆண்டு மியூனிச் ஒலிம்பிக்கில் 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை கொன்றதுடன் இஸ்ரேலியர்கள்மீது வேறு பல தாக்குதல்களையும் நடத்தியுள்ளவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

இவ் இயக்கத்தலைவர்களை பழிவாங்க இஸ்ரேலிய பிரஜைகளை கொன்றவர்கள் கடத்தியவர்கள் ஆகியோரை வேட்டையாடுவதை இஸ்ரேல் பகிரங்க கொள்கையாக கொண்டுள்ளது.

பீ- எல். ஓ தலைமையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போராட்டமேஇக்கொலைக்கு காரணமென இஸ்ரேலிய தூதரக அதிகாரி டேவிட் டகோன் கூறியுள்ளார்.

இதனால் இஸ்ரேல்- அரபுப் பிரிவில் இருசாராருடனும் பிரெஞ்சு உறவு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

பிரெஞ்சு அரசின் உளவுப் பிரிவுடன் ஐரோப்பாவில் உள்ள பாலஸ்தீனியரின் பாதுகாப்பு குறித்து பெஸிஸோவுக்கு சீரான தொடர்பு இருந்ததாகவும் பாரிசில் இருக்கும் போது உளவு அதிகாரிகளை அவர் சந்திக்க இருந்ததாகவும் பாலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனவே பெஸிஸோவை பாதுகாக்கத் தவறியது காரணமாக பாலஸ்தீனியரின் கண்டனத்தையும், பாலஸ்தீனியருடன் தொடர்பு கொண்டிருப்பது காரணமாக இஸ்ரேலின் கண்டனத்திற்கும் பிரான்ஸ் உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெஸிஸோ உத்தியோக ரீதியில் பிரெஞ்சு பாதுகாப்பில் இருக்கவில்லை என பிரெஞ்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெஸிஸோ பாரிசில் ஒருநுட்பமான ராஜதந்திரத்தை மேற்கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

பெஸிஸோவின் கொலை ஒரு உளவுப் பிரிவினரால்மேற்கொள்ளப்பட்டதாக மத்திய கிழக்கு நிபுணர்கள் கூறினர். இவரின் கொலை பி.எல்.ஓ தலைமைக் காரியாலயத்தில் பழி வாங்கும் சபதத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாகலாந்து மாநிலத்தில்

# தீவிரவாதிகள் திடீர்தாக்கு 14ராணுவம்பலி10பேர்காயம்

( டில்லி )

இந்தியாவில் நாகலாந்து மாநிலத்தில் இராணுவ வாகனங்களை தீவிர வாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் பதின்நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் பத்து இராணுவத்தினர் காயமடைந்தனர் நாகலாந்து தேசிய சோசலிஸ்டுக் கவுன்சிலைச் சேர்ந்த தீவிரவாதிகளே இத் தாக்குதலுக்கு பொறுப்பு எனத் தெரியவருகின்றது

# சங்கர் தயாள் சர்மா இந்தியஜனாதிபதியாகலாம்

(டில்லி)

இந்தியவின் குடியரசுத் தலைவர் தேர்தலில் தற்போதைய உபஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் நியமனத்தைப் பெறக்கூடும் என்று நம்பகமாகத் தெரிய வருகின்றது.

காங்கிரஸ் கட்சி இதுபற்றி இன்னமும் உத்தியோக பூர்வமாக அறிவிக்காத போதிலும் டாக்டர் சங்கர் தயாள் சர்மா காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டால் அவரை ஆதரிக்க இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் தயாராக இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை தற்போதைய ராஜ்ய சபா உறுப்பினரும் பிரபல்யம் மிக்க சட்டத்தரணியுமான ராம் லக்தமலானி இத் தேர்தலில் போட்டியிட விருப்பதாக அறிவித்துள்ளார்

இதனிடையே ஜனாதிபதி பதவிக்கு தேர்தல் எதுவுமின்றி ஏகமனதாக ஒருவரை நியமிக்க வேண்டுமென்பதில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சிகளும் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு உள்ளன.

# தகவல் கொடுத்தோருக்கு பணம் பகிர்ந்தளிப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் தேடப்பட்டுவந்த சிவராசன் பற்றிய தகவல்களைக் கொடுப்பவர்களுக்கென அறிவிக்கப்பட்ட பதினைந்து லட்சம் ரூபாய் பரிசுத்தொகை இருபத்தொரு பேருக்குப் பிரித்து வழங்கப்பட இருப்பதாக சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவர் வி. ஆர். கார்த்திகேயன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் கொடுக்கப்பட்ட தகவல்களின் தன்மை, வகை என்பவற்றின் அடிப்படையில் இது பகிரப்படுவதாகத் தெரிவித்தார்.

# இந்திய ராஜதந்திரத்தில் முரண்பாடு நிலவுகின்றது

(டில்லி)

அயல் நாடுகளுடனான உறவில் இந்தியாவின் ராஜதந்திரம் முரண்பாடான தன்மையைக் கொண்டிருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீனாவுடனும், பங்களாதேசுடனும், ஆக்கபூர்வமான பேச்சுக்களில் நரசிம்மராவ் அரசு ஈடுபட்ட அதே வேளையில் பாகிஸ்தானுடன் ராஜதந்திர யுத்தம் ஒன்றிலும் ஈடுபட்டிருப்பதைச்சுட்டிக்காட்டியே இவ்விதம் தெரிவிக்கப்படுகின்றது

இந்தியக் குடியசுத்தலைவர் வெங்கட்ராமன் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயமும், பங்களாதேசப் பிரதமர் பேகம் காலிதா ஸியா இந்தியாவுக்கு மேற்கொண்டவிஜயமும் இந்தியாவுக்கு சாதகமாக இருக்கும் அதேவேளை, பாகிஸ்தானுடன் ஏற்பட்ட சர்ச்சை இதற்கு எதிரானதாக இருப்பதாகவும் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மையில் இந்திய ராஜதந்திரியான ராஜேர் மித்தல் பாகிஸ்தான் புலனாய்வு உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டது தெரிந்ததே.

# சுற்றுப்புறச்சூழலைதிருத்த கூட்டு நடவடிக்கைதேவை

பி. வி. நரசிம்மராவ்

(றியோடி ஜெனரோ)

சீர் கெட்டுப்போகும் பூமியின் சுற்றுப்புறச் சூழலைத் திருத்துவதற்கு கூட்டு நடவடிக்கையும், சர்வதேச ஒத்துழைப்பும் தேவை என இந்தியப்பிரதம மந்திரி பி. வி நரசிம்மராவ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று றியோடி ஜெனரோவில் புவிக்கோள உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர் இந்த அவசரப்பிரச்சினையைச் சமாளிப்பதில் பேரம் பேசுவதோ, அரசியல் பேசுவதோ கூடாது என்று கூறினார்.

சில செயல்கள் பற்றிச் சில நாடுகள் எதுவும் தெரியாது என்று கூறுவதாலோ வேறு சில செயல்களுக்காக பொறுப்பை சிலநாடுகள் தட்டிக் கழிப்பதாலோ கூட்டு நடவடிக்கை எடுக்க முடியாது உலகில் எல்லா சுற்றுச் சூழல் பிரச்சினைகளும், ஒன்றோடொன்று இணைந்தவை என்று கூறிய பிரதமர் இந்தப் பூமியை காப்பாற்றுவதற்கு தனி ஒரு திட்டம் தேவை என்றார். இது தொடர்பாக ஒரு காலக்கெடு குறிக்கப்படவேண்டும். எல்லா நாடுகளும் நம்பகமான வாக்குறுதிகளை வழங்கவேண்டும் என்று பிரதம மந்திரி நரசிம்மராவ் கேட்டுக்கொண்டார்.

எந்தவொரு நாட்டையும் பிரதமர் பெயர் சொல்லிக் குறிப்பிடவில்லை என்றாலும் உயிரினப்பாதுகாப்புஒப்பந்தத்தில் கைழுத்திட மறுத்த அமெரிக்காவைப்பற்றித்தான் பிரதமரின் குறிப்பு அமைந்துள்ளது என்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# பனிப்போர் எதுவுமில்லை ஆயுதப்போட்டி ஏன்?

- பிடல்காஸ்ரோ

( றியோடி ஜெனறோ )

இப்போது உலகில் பனிப்போர் எதுவும் இல்லை, எனவே ஆயுதப் போட்டிக்கோ இராணுவ விரிவாக்கத்திற்கோ தேவை எதுவும் இல்லை என்று கியூபாவின் அதிபர் பிடல்காஸ்ரோ தெரிவித்தார்.

றியோடி ஜெனறோவில்நடைபெறும் புவி உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் வளர்ந்த நாடுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# ஈழநாதம்

வை. கோபாலசாமி உட்பட

## பத்தாயிரம் தி. மு. க. வினர் தமிழ்நாடு முழுவதும் கைது

(சென்னை)

தமிழ் நாடெங்கும் பத்தாயிரம் தி மு. க. தொண்டர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டார்கள். தி மு க. நாடாளுமன்றஉறுப்பினர் வை.கோபாலசாமியும் கைது செய்யப்பட்டார்.

தமிழ் நாட்டில் இதுவரை காலமும் விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. அதற்கு கட்டணம் வசூலிக்க ஜெயலலிதா அரசு தீர்மானித்ததை எதிர்த்து தி. மு. கழகம் தமிழ்நாடு எங்கும் மாட்டு வண்டி ஊர்வலங்களை ஏற்பாடு செய்து நடத்தியதைத் தொடர்ந்தே மேற்படி கைது நடவடிக்கை.

தி. மு. க. பணிமனை வெளியிட்ட செய்தி அறிக்கை ஒன்றில், தமது தொண்டர்கள் 10 ஆயிரம் பேர் தமிழ்நாடெங்கிலும் கைது செய்யப்பட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஜெயலலிதா அரசு விதிக்கத் தீர்மானித்திருக்கும் இந்த மின்சாரக் கட்டணத்தை ரத்துச் செய்யும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக இலவசமாக மின்சாரத்தைப் பெற்று வந்த தமிழ் நாட்டைச்சேர்ந்த சுமார் 10 லட்சம் விவசாயிகள் புதிய மின்சாரக்கட்டணத்தை எதிர்க்கிறார்கள்.

திருநெல்வேலி மாவட்ட சந்திரன் கோயிலில் ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிச் சென்ற வை. கோபாலசாமி பல விவசாயிகளுடன் கைது செய்யப்பட்டார்

## ராவய பத்திரிகைமீது உரிமைமீறல் நடவடிக்கை

(கொழும்பு)

ராவய பத்திரிகை மீது உரிமைமீறல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று செங்குப்பொருள் கைத்தொழில் அமைச்சர் இந்திரதாஸ ஹெட்டியாராய்ச்சி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

காணி விற்பனை ஒன்றில் அமைச்சர் சம்பந்தப்பட்டிருந்ததாக ராவய செய்தி வெளியிட்டிருந்தது.

தனக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்தும் வகையில் இந்தச் செய்தி பொய்யாகவும், அவதூறாகவும் பிரசுரிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். பாராளுமன்ற உரிமைகள் மீறல் குழு இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இது குறித்து நடவடிக்கை எடுப்பதாகப் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா உறுதியளித்தார்.

## இன்று கூட்டம்

தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பான நேர்முகப் பரீட்சை வவுனியாவில் நடைபெற உள்ளது இது தொடர்பாக ஆராய என இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் கூட்டம் நடைபெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

## மருந்துகள் இல்லை

வடமராட்சிகிழக்கில் உள்ள மருதங்கேணி அரசினர் வைத்திய சாலையில் மருந்துகள் இல்லை.

அஸ்பிறின், பனடோல், மலேரிய தடை வில்லைகள் உட்பட மருந்துப் பொருட்கள் எதுவும் இல்லை.

மருதங்கேணி தாளையடி, செம்பியன்பற்று. மாசார் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களும், வெற்றிலைக்கேணி, பளாலி, திருமலை ஆகிய பகுதிகளின் இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து இவ்வைத்தியசாலையைச்சூழவுள்ள கிராமங்களில் தங்கியுள்ள மக்களும் இதனால் பாதிப்படைந்து. வைத்திய வசதியின்றி கஷ்டமடைய வேண்டியுள்ளது. (36)

## இராணுவத்திற்கு பெண்கள் சேர்ப்பு

வவுனியா அகதிமுகாம்களிலிருந்து சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு இடம்பெறுவதாகத் தெரிகிறது.

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளபகுதி அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளவர்களுடன் பழகும் இராணுவத்தினர் பயிற்சிக்கு தமிழ் பெண்களைசேர்க்கின்றனராம்.

நெளுக்குளம் அகதிமுகாமில் ஐந்து தமிழ் இளம் பெண்கள் இராணுவ பயிற்சிக்கென தமது பெயரை வழங்கியுள்ளதாக அறிப்பட்டது. (தி)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம் 10-06-1975



வீரமரணம் 3-06-1991

வீரவேங்கை சோழன்

தமிழ் நாடு பொலிஸ் நிலையங்கள் முன்

## 'தூக்குகயிறு'போராட்டம் பா.மக்கள் கட்சிநடாத்தும்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி நாளை திங்கட் கிழமை தமிழ் நாடெங்கும் 'தூக்குக் கயிறு' ஆர்ப்பாட்டம்ஒன்று நடாத்தவுள்ளது இந்த ஆர்ப்பாட்டம் தமிழ் நாடு பொலிஸ் துறை அலுவலகங்களின் முன்னால் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

திரு. இராசையா மகாலிங்கம்

## துறவியான விபுலானந்தர் அறிவியலை கைவிடவில்லை

(யாழ்ப்பாணம்)

துறவறத்தைத் தழுவிக்கொண்ட முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் அறிவியல்முயற்சிகளைக் நழுவ விடவில்லை. இவர் துறவுபூண்ட காலத்தில் எழுதிய யாழ் நூலில் அடங்கியிருக்கும் சு ராம்சதகைக் கொண்டு நோக்கும் போது இவர் அறிவியல் கொள்கையினைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்துள்ளார் என்பதினைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது. விபுலானந்தஅடிகளாரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இது குறிப்பிடக் கூடிய ஒரு விடயமாகும்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக தமிழ் மன்றமும், மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து நடாத்திய விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறபுரை நிகழ்த்திய பேராசியர் அ. சண்முகதாஸ் கூறினார்.

பல்கலைக் கழகத் தமிழ் மன்றத் தலைவர் சி விசாகரூபன் விழாவுக்குத் தலைமை தாங்கினார். பிற்பகல் 3 மணியளவில் மங்கள விளக்கேற்றி விழா ஆரம்பித்து வைக்கப் பட்டது

விழாவில் விபுலானந்த அடிகளின் நூற்றாண்டு விழா ஆய்வுக் கட்டுரைத் தொகுதி என்னும் நூலைப் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் வெளியிட்டார். இந்நூலின் ஆய்வுரையைப் பேராசிரியர்கள் நா. பாலகிருஷ்ணன். வி. கே. கணேசலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினார்கள். மறுமலர்ச்சிக் கழகச் செயலாளர் த. சிறிகாந்தன் நன்றியுரை கூறினார். இறுதி நிகழ்ச்சியாக கலைப்பீட மாணவிகளின் உள்ளக்கலம் என்னும் நாட்டிய நாடகமும் இடம் பெற்றது. (பா)

தலைமைத்துவத்தை சிலர்

## தவறாகப் பயன்படுத்தியதே சீர்குலைவிற்குக் காரணம்

கடந்த காலங்களில் நம் நாட்டில்சிலர் தங்களின் தலைமைத்துவத்தை தவறாகப் பயன்படுத்தியதன் விளைவாக நாட்டில் ஏற்பட்ட சீர்குலைவுகளையும், பேரழிவுகளையும் சிந்திக்காமல் இருக்க முடியாது

கண்டி இந்து கலாசார மண்டபத்தில் மத்திய மாகாண தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையிலான மாணவ தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றிய கண்டிப் பிரதேச பொலிஸ் அதிபர் லக்ஷ்மன் செனவிரதன மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில் பாடசாலையில் மாணவ தலைவர்களாக திகழ்பவர்கள் சிறந்த முறையிலும், உயர்ந்த முறையிலும் கட்டுக்கோப்பு ஒழுக்கத்தோடும் நிறைவேற்றுவார்களேயானால் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாகவும் சமூக வழிகாட்டிகளாகவும், தலைவர்களாகவும் மிளிரலாம் எனவும் தெரிவித்தார்.

## திருவிளக்கு பூசை

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை கிழக்கு மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் - ஐயனார் ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் பூரணை தினத்தன்று மாலை ஆறு மணிக்கு நடைபெறும் 'திருவிளக்குப் பூசை' இன்று 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும்.

### கிராம

...டால் பரீட்சை தாமதித்தே நடைபெறும் எனவும் பரீட்சார்த்திகள் அவரவர் பரீட்சை நிலையங்களில் தங்கி இருக்குமாறு கல்வித்திணைக்களம் நேற்று அறிவித்தது தெரிந்ததே.

இதற்கிடையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இட பரீட்சை நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

### விடுதலை

...சின் புதிய அணுகுமுறையாக இருக்கிறது.

கடந்த சில வாரங்களாக பிளவுபட்டு செயலிழந்து கிடந்த பாராளுமன்றத் தெரிவுக்குழு பல் வேறு கட்சிகளின் அரசியல் லாபங்களும், நிர்ப்பந்தங்களும் காரணமாக மீண்டும் புத்துயிர்ப்பு பெற்று செயற்படத் தொடங்கியுள்ளமை வாசகர் அறிந்ததே

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக தீர்வு ஒன்றைக் காணும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு இதுவரை தமிழர் பிரச்சினை குறித்து எவ்வித தீர்வுத்திட்டம் ஒன்றையும் உருவாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் இன்றும் தமது தீர்வுத் திட்டங்களை முன்வை...

### சுமத்தப்பட்ட

...என்று குற்றம் சாட்டப்பட்டு வடமத்திய மாகாணசபை உறுப்பினர் நிசங்கசாநாயக்க என்பவர் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே இவர் தொடர்ந்து இரகசியப் பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

இது தொடர்பான தகவல்களை நேற்றைய சிங்கள பி. பி. சி சேவை வெளியிட்டது.

இந்த மாகாணசபை உறுப்பினர் மதவாச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஊழல்களை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், மதவாச்சி பகுதியில் முஸ்லிம் வர்த்தகர் கொலையில் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்டிருந்தமை குறித்து செய்திகளை வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி காரணங்களுக்காகவே மாகாணசபை உறுப்பினர் மீது பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இப்பொறுப்பதிகாரி தொடர்பாக லங்காதீப பத்திரிகையில் செய்திகள் வெளிவந்தபோது மதவாச்சிப் பகுதியில் அப்பத்திரிகைகள் விற்பனை செய்யப்படாதவாறு பொலிஸ் பொறுப்பதிகாரி தடுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### இராணுவம்

...தாம் வெற்றி பெற்றுவிட்டதாக காட்டுவதற்கு மிகைப்...

### புலிகள்

...வில் சிறிலங்காசுகாதார கட்சி மீண்டும் கலந்துகொள்ளத் தீர்மானித்திருப்பதை அடுத்து தெரிவுக்குழு மீண்டும் 20 ஆம் திகதிக்குப்பின் கூட இருப்பதாக செய்திகள் வெளியாகியமை தெரிந்ததே

டணத்தை ரத்துச் செய்யும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக இலவசமாக மின்சாரத்தைப் பெற்ற மீறல் குழு இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழ் நாடு பொலிஸ் நிலையங்கள் முன்

## 'தூக்குகயிறு' போராட்டம் பா.மக்கள் கட்சி நடாத்தும்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி நாளை திங்கட் கிழமை தமிழ் நாடெங்கும் 'தூக்குக் கயிறு' ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் தமிழ் நாடு பொலிஸ் துறை அலுவலகங்களின் முன்னால் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### திரு இராசையா மகாலிங்கம்
### திருமதி சிவபாக்கியம் மகாலிங்கம்
### செல்வி மதனகலா மகாலிங்கம்
### மருமகன் திரு சபாரத்தினம் சுபாஸ்சந்திரன்

தெல்லிப்பளை வீமன்காமத்தைச் சொந்த வசிப்பிடமாகக் கொண்ட திரு. இ. மகாலிங்கம் (காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர்), அன்னாரது மனைவி சிவபாக்கியம் (அம்மாக்கா), மகள் செல்வி மதனகலா மற்றும் அன்னாரது மருமகன் சபாரத்தினம் சுபாஸ்சந்திரன் (வதிரி கரவெட்டியைச் சேர்ந்த காலஞ் சென்ற மலாயன் பென்சனியர் திரு. திருமதி சபாரத்தினத்தின் மகன்) ஆகியோர் கடந்த 10-06-92 மாலை 4.45 மணியளவில் தெல்லிப்பளை துர்க்காபுரத்தில் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சின் போது அகால மரணம் அடைந்துள்ளனர். இவர்களது மரணச் சடங்குகள் யாவும் யாழ். வளாக வீதி திருநெல்வேலியிலுள்ள அன்னாரது மகனாகிய மகாலிங்கம் குபேந்திரதாஸ் (ரவி) அவர்களது இல்லத்தில் 11-06-92 அன்று நடைபெற்று கோக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

யாழ். வளாக வீதி, திருநெல்வேலி.

தகவல் தருபவர்: மகன் திரு. மகாலிங்கம் குபேந்திரதாஸ் (ரவி)

[சி/4545]

## சுபாஸ்சந்திரன் (சந்திரன்)

வதிரியை பிறப்பிடமாகவும் மல்லாகத்தை தற்காலிக வதிவிடமாகக் கொண்ட சுபாஸ்சந்திரன் (சந்திரன்) துர்க்காபுரத்தில் இடம் பெற்ற குண்டு வீச்சில் அகாலமாணமனார். அன்னார் சசிகலாவின் கணவரும், விஜய், ஷர்மினி, சுரேபினி, நிரோபினியின் தந்தையும், வதிரியைச் சேர்ந்த காலம் சென்ற மலாயன் பென்ஷனியர் சபாரெத்தினம் தம்பதிகளின் மகனும், அகாலமரணமடைந்த மகாலிங்கம் தம்பதிகளின் மருமகனும், ஜெகதீசன் ஜெயராணி, அரசன் (வதிரி) காலம் சென்ற வீரேசன் ஜெயதேவி, ஜெயகுமாரி, கணேஷன், ஜெயசோதி, ஜெயமணி, ஜெபசந்திரன் (நல்லூர்) ரவீந்திரனின் சகோதரனும் ஆவார். அன்னாரின் மரணச்சடங்குகள் 10-06-92 கோக்குவில் இந்து மயானத்தில் நடைபெற்றது.

தகவல்: இந்திரன் (நல்லூர்)
அரசன் (வதிரி)

(சி/4544)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மசேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 10-06-1975

வீரமரணம் 3-06-1991

### வீரவேங்கை சோழன்
### (தனபாலசுப்பிரமணியம்-இராஜராஜன்)

தமிழ் தாயின் விடிவிற்காய்
களம் தனிலே பாய் புலியாய்
சோழன் எனும் வீரவேங்கை
வீறு கொண்டு விரைந்திட்டான்
ஆறாறு மாதங்கள் தீரமுடன்
சமர்செய்து காவியத்தின் கருவானான்
மணலாற்று சமர்தனிலே
மார்புதனில் குண்டேந்தி
மண்ணிற்காய் மடிந்திட்டான்
மாவீரன் தான் ஆனான்
அத்தகைய வீரனிற்கு
தம்மிதய அஞ்சலிகள்

கோப்பாய் வடக்கு, கோப்பாய். (2668)

உன் பிரிவால் வாடும் கோப்பாய் வாழ் மக்கள்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரச்சாவு 14 — 06 — 1992

வீரஜனனம் 13 — 08 — 1969

### வீரவேங்கை ஜீவமலர்
### (ஸ்ரீ துளசி கணேசசுந்தரம்)

மண்ணை மதித்தாய் மண்ணுக்கு நீ ஆளானாய்
கண்ணின் மணியே என்றும் எம் நெஞ்சில்
நீ நிலைப்பாய்

அரச வீதி, நல்லூர்.

அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்

(2664)

சின் புதிய அணுகுமுறையாக இருக்கிறது.

கடந்த சில வாரங்களாக பிளவுபட்டு செயலிழந்து கிடந்த பாராளுமன்றத் தெரிவுக்குழு பல்வேறு கட்சிகளின் அரசியல் லாபங்களும், நிர்ப்பந்தங்களும் காரணமாக மீண்டும் புத்துயிர்ப்பு பெற்று செயற்படத் தொடங்கியுள்ளமை வாசகர் அறிந்ததே.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக தீர்வு ஒன்றைக் காணும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு இதுவரை தமிழர் பிரச்சினை குறித்து எவ்வித தீர்வுத்திட்டம் ஒன்றையும் உருவாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் இன்றும் தமது தீர்வுத் திட்டங்களை முன்வைக்க துணியவில்லை அதேசமயம் தமிழர்தாயகம் சம்பந்தப்பட்ட விடயத்தில், அதாவது வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரத்தில் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மத்தியில் தலைதூக்கிய முரண்பாடு இன்றும் தீர்ந்ததாகவும் இல்லை இச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகள மீது அழுத்தம் போட்டு அவர்களை விட்டுக் கொடுக்கச் செய்ய சிங்கள அரசு முயற்சிக்கின்றது. இந்த புலிகள் எதிர்ப்புத் தந்திரோபாயத்தில் சிங்கள கட்சிகளும், தமிழ்க் குழுக்களும், இந்திய அரசும் ஒன்றிணைந்து செயற்படுவதாக நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன.

### வீரவணக்கம்

சாவைத்தழுவிக் கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### வேலைபெறச்

சேவையின் போது தொலைத்தொடர்பு அமைச்சுக்கு வேலையை மீளப்பெற விண்ணப்பித்திருந்தார் ஜூன் 8 ஆம் திகதி கொழும்பிலுள்ள தொலைத்தொடர்புகள் அமைச்சுக்கு வருமாறு அதிகாரிகள் பணித்திருந்தனர்

இதற்கமைய கொழும்பு சென்றபோது குறித்த அமைச்சில் வைத்து அவர் ஒரு தீவிரவாதி என்றும் விசாரிக்க வேண்டும் என்றும் பொலிசார் கைதுசெய்து தற்போது கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### 30 ,,,, பொது

வதந்திகளினாலுமே இவ்வளவு பெருந்தொகையாக மக்கள் வெளியேறி வருகின்றனர்.

இராணுவத்தாக்குதல் அச்சுறுத்தல்களால் இடம் பெயர்ந்து பண்டத்தரிப்புப்பகுதியில் இம் மக்கள் தங்கியுள்ளனர்.

பகுதியில் முஸ்லிம் வர்த்தகர் கொலையில் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்டிருந்தமை குறித்து செய்திகளை வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி காரணங்களுக்காக அவமானம் சுமத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்ட மேற்படி பொறுப்பதிகாரி மீது பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இப்பொறுப்பதிகாரி தொடர்பாக லங்காதீப பத்திரிகையில் செய்திகள் வெளிவந்தபோது மதவாச்சிப் பகுதியில் அப்பத்திரிகைகள் விற்பனை செய்யப்படாதவாறு பொலிஸ் பொறுப்பதிகாரி தடுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### இராணுவம்

தாம் வெற்றி பெற்றுவிட்டதாக காட்டுவதற்கு மிகைப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் புலிகள் கொல்லப்பட்டதாக இராணுவத்தரப்பு செய்திகளை வெளியிட்டுவருகிறது. ஆனால் உண்மையில் பலியானோரில் பெரும்பாலோனோர் பொது மக்களே.

மூன்று வாரங்களில் இரண்டு இராணுவ உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டமை இராணுவ தரப்பில் பெரும் இழப்பு என கருதப்படுகிறது.

உலகத்தின் கரந்தடிப்படைகளில் முதன்மை பெற்றுவிளங்கும் விடுதலைப்புலிகளை ஒடுக்குவது மிகவும் கடினம். அவ்வாறு ஒடுக்கினாலும் அவர்களின் ஊடுருவல் தாக்குதல்களினால் இராணுவ தரப்பில் பெரும் இழப்புகள் ஏற்படும் என இராணுவ அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

ஓர் இராணுவ அதிகாரியின் கருத்துப்படி பலத்தமுயற்சியினால் யாழ்ப்பாணக்குடாநாட்டை இராணுவம் கைப்பற்றினாலும் இராணுவப் பிடிக்குள் தொடர்ந்து வைத்திருப்பது சாத்தியமான விடயமல்ல என அந்த கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது

## திருவிளக்கு பூசை

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை கிழக்கு மணலியம் பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் - ஐயனார் ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் பூரணை தினத்தன்று மாலை ஆறு மணிக்கு நடைபெறும் 'திருவிளக்குப் பூசை' இன்று 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும்.

### புலிகள்

வில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் கலந்துகொள்ளத் தீர்மானித்திருப்பதை அடுத்து தெரிவுக்குழு மீண்டும் 20 ஆம் திகதிக்குப்பின் கூட இருப்பதாக செய்திகள் வெளியாகியமை தெரிந்ததே

சுதந்திரக்கட்சி தெரிவுக்குழு உறுப்பினரான ஹலீம் இஷாக், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் ஆகியோர் மக்கா சென்றுள்ளதால் அவர்கள் நாடு திரும்பியதும் தெரிவுக் குழுவின் அடுத்த அமர்வு எப்போது என்பது தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்க இராணுவத்தினர் தாக்குதல்களை ஆரம்பித்துள்ள அதேவேளை புலிகள் விரும்பினால் தெரிவுக்குழுவிற்கு தங்கள் யோசனையைச் சமர்ப்பிக்கலாம். இதற்கான காலம் கடந்துவிடவில்லை என்று தெரிவுக் குழுவின் முக்கிய உறுப்பினர் ஒருவர் அப்பத்திரிகைக்கு மேலும் தெரிவித்தார்

### வீதி விபத்து

றோட் யாழ்ப்பாணம் வி றது னதாஸ் 23 வயது) இரத்தினம் (60 வயது ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்

(பா)

## வாகன வரிசை இலக்கம்
## 13-06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்:-4354

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்:- 3425

இராணுவம்அனுமதித்த இறுதி வாகனவரிசை இலக்கம்- 3400

வடபகுதிக்கு வெளியே செல்ல இராணுவம் அனுமதிக்க வாகன இலக்கம்:-

26-6511 27-3903 26-6596
26-4526, 40-4225 24-6065
24 9830, 22 8176 41 9166
28-3528 26-2277 26-5882.
28-1110, 28-1901 36-6983,
37-3822 27-9707, 24-8029,
24 4207, 27-7056, 26-4323,
27 5775, 24-4705, 26-2786,
41-3605, 24-8700, 20-4727
36-2954 25-7743, 25 2045,
25-5771, 37-1736 36-4582
40-7573, 26-5206 24-4390,
41-1227. 27-1027, 26-1098,
22-7406, 40-2829, 27 9772

இராணுவம் வடபகுதிக்கு உள்ளே வர அனுமதித்த வாகன இலக்கம்:-

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்-22 வாகனங்கள்

41 1996 27-297 41 9659
27 6563 42-1059 27-2004,
26-4450, 22-3611, 24-4468